விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 061 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 06 சனிக்கிழமை (18.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### தபால்மூல வாக்கெடுப்பு

## மறுஅறிவித்தல் வரை ஒத்திவைப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பு மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவின் கையொப்பத்துடன் வெளியான அறிவிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கான நிதியை வழங்குவதில் சிக்கல்

### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நிதியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான நிதியினை வழங்குவதில் பாரிய சிக்கல்கள் இருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் நேற்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போதே அவர்கள் இதுகுறித்து அறிவித்துள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக் 11

## தூவானம்

### திரைப்படம் இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்களின் ஒடுக்குமுறையை சித்தரிக்கும் "தூவானம்" திரைப்படம் இன்று வெளியிடப்படவுள்ளது.

மருத்துவ நிபுணர் சிவன்சுதனின் தயாரிப்பில் இத்திரைப்படம் உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் 11

### மார்ச் 1ம் திகதி முதல்

## அரசுக்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டம்

### நாடளாவிய பணிப்புறக்கணிப்புக்கு தயாராகும் தொழிற் சங்கங்கள்

(கொழும்பு)

மார்ச் முதலாம் திகதி முதல் அரசுக்கு எதிராகப் பாரிய எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்புக்கு தொழிற்சங்கங்கள் தயாராகி வருகின்றன.

(11ஆம் பக்கம் பார்க்க)



### தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராக

## கொழும்பில் திங்கள் முற்றுகைப் போராட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு திகதி பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பை ஐக்கிய மக்கள் சக்தி முற்றுகையிடவுள்ளதாக பாராளுமன்ற 11

### யாழ்.பல்கலைக்கழக

## முன்னாள் துணைவேந்தர் விக்னேஸ்வரன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் கணிதத்துறை பேராசிரியருமான ரட்ணம் விக்னேஸ்வரன் 11

## நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

### QR இன்றி எரிபொருள் வழங்காததே காரணம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 12.20 மணிக்கு இடம்பெற்ற வாள்வெட்டில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் 11

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தை

## ஜனாதிபதி ரணில் முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டு தற்போது அமைதிப் போராட்டங்களை அடக்குவதற்கும் 11

## நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபித்தல் தொடர்பில்

### மனித உரிமைகள் ஆணைக்குழு அரசியல் கட்சிகளுடன் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுமாக இருந்தால் அது எவ்வாறான முறையில் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற முறைகள் தொடர்பில் அரசியல் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ந்த நாட்டைக் கட்டியெழுப்பும் அணி எங்களிடமே உள்ளது - சஜித்

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்பும் திறமையும் இயலுமையும் ஆற்றலும் கொண்ட அணியினர் ஐக்கிய மக்கள் சக்தியிடமே இருக்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வலப்பனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறுவனங்களுக்குச் சொந்தமான நாட்டில் விவசாயம் செய்யப்படாத பாரியளவிலான காணிகள் பல உள்ளன. அவை இன்றளவில் பாழ் நிலமாக மாறியுள்ளன.

தொழிலாளிகளாக உழைக்கும் பெருந்தோட்ட சமூகத்தையும், இடம் உரித்தற்ற இளைஞர் சமூகத்தையும் சாதி பேதமின்றி ஒன்றாகக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

அவர்களை இடமொன்றுக்கும் சிறிய தேயிலை தோட்டத்தின் உரிமையாளராகவும் உருவாக்குவதேஎனதுநோக்கம் பொருளாதாரத்தைச் சுறுக்குவதன் மூலம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

இந்த நாட்டை சோசலிசத்தினாலோ அல்லது முதலாளித்துவத்தினாலோ கட்டியெழுப்ப முடியாது. சமூக ஜனநாயகப் போக்கொன்றாலே இதை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம)

## நல்லிணக்க ஆணைக்...

கட்சிகளுடன் மனித உரிமைகள் ஆணைக் குழு நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளரும் ஓய்வு பெற்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க தலைமையிலான ஆணைக் குழுவின் உயர் மட்ட குழுவினர் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளனர்.

குறிப்பாக ஆணையாளர், செயலாளர், விசாரணைப் பணிப்பாளர், சட்ட அலுவலர்கள் அடங்கிய குழுவினர் யாழ். விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

குறித்த கலந்துரையாடலில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு ஸ்தாபிக்கப்படுமாக இருந்தால் அது எவ்வாறான முறையில் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற முறைகள் தொடர்பிலும் கலந்தாலோசனை செய்தனர்.

குறித்த கலந்துரையாடலில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் மணி வண்ணன், த.சிற்பரன், முன்னணி சார்பில் சுகாஷ் மற்றும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ம)

## பால் - தயிர் - இறைச்சி விலை இரட்டிப்பாகின்றன

(கொழும்பு)

பால், தயிர், இறைச்சி உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலையும் இருமடங்காக அதிகரிக்கப் படவுள்ளதாக தேசிய விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சார கட்டணம் 66 வீதத்தால் அதிகரித்தமையே காரணம் என அதன் அழைப்பாளர் சுஜீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

கால்நடை உற்பத்தியாளர்கள் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் உறைவிப்பான்களை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும், மின்சாரக் கட்டண உயர்வால், குளிர்சாதனப் பெட்டிகளில் தங்களுடைய பொருட்களை வைப்பதற்கு பெரும் செலவினங்களைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)


## பணியாளர் தேவை

**நெல்லியடியில் இயங்கும் உணவகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.**

1. **சமையல் உதவியாளர்.**
2. **உணவு பரிமாறுபவர்.**

தங்குமிடம் உணவு வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு :- 077 362 0979**

(C-5999)

## காணி விற்பனைக்கு

2-4 பரப்புகளாக பிரிக்கப்பட்ட 4 ஏக்கர் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு. விலாசம் முல்லைத்தீவு செல்வபுரம் (ஓசன்பாக் கொட்டேல் அருகாமை) பார்வையிடும் நேரம் சனி காலை 11.00 மணி (18.02.2023) தொடக்கம் ஞாயிறு (19.02.2023) மாலை வரை

**தொலைபேசி எண் :-**
**077 020 4905**

(14620)


**குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்**

**யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்**

சிவசுப்பிரமணியம் ஜெயசங்கர்
கரம்பன் குறிச்சி மேற்கு
வரணி
யாழ்ப்பாணம்

- வழக்காளி -

வழக்கிலக்கம் : நானாவிதம் / 434 / 2023

எதிர்

1. கே.பாலகிருஸ்ணன்
தலைவர்,
இலங்கை
செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை,
இல.67, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
2. கந்தவனம் மகாலிங்கம்
செயலாளர்,
இலங்கை
செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை,
இல.67, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
3. எட்வேட் அருந்தவசீலன்,
பொருளாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை,
இல.67, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
4. சங்கரப்பிள்ளை திரவியராசா,
புலோலி தெற்கு,
புலோலி.

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட எதிராளிகளுக்கு எதிராக 04 ஆம் எதிராளி தீவிர அரசியலில் ஈடுபடுகின்றார் என்ற பிரகடனமும் தீர்ப்பும். 04 ஆம் எதிராளி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளைக்கு தலைமைப் பதவிக்கு போட்டியிடவோ தலைவராக தெரிவு செய்யப்படவோ முக்கிய நிர்வாக பதவிகளை வகிக்கவோ தகுதியற்றவர் என்ற பிரகடனமும் தீர்ப்பும். 4 ஆம் எதிராளி தலைவர் பதவிக்கு போட்டியிட வழிவகுக்கும் 19.02.2023 ஆம் திகதிய இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் பொது கூட்டத்தினையும் நிர்வாக தெரிவினையும் நடாத்த தடைவிதிக்கும் நிரந்தர தடைக் கட்டளைகளை பிரதான நிவாரணமாக கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ் வழக்கானது 03.03.2023-ஆம் திகதி காலை 9.00க்கு இம் மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

(14639)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகத்தில் காணப்படும் பாவனையில் இல்லாத அலுவலக தளபாடங்கள், கணனி உபகரணப்பொருட்கள் மற்றும் பாவிக்கமுடியாத / பாவனைக்குத் தேவைப்படாத பொருட்களை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பான விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகர் கிளிநொச்சி வளாக பொது நிர்வாகக்கிளையுடன் தொடர்புகொண்டு குறித்த தினத்தில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 03.00 மணிவரை மட்டும் பார்வையிடலாம். (தொடர்பு இலக்கம்- 021 206 0180)

ஏலவிற்பனை நடைபெறும் இடங்கள்.

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|---|
| 01 | அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள்<br>• ஆய்வுகூடப்பொருட்கள் | 23.02.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை | 24.02.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி |

ஏலவிற்பனையில் பொருட்களை பார்வையிட விரும்புபவர்கள் அனுமதிக் கட்டணமாக ***ரூபா 2000.00ஐ*** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் ***970000060000276*** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், என்ற பெயரில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுடன் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக ஏலப்பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் 24.02.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 15,000.00 ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக நிதிக்கிளையில் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து ஏலவிற்பனையில் கலந்து கொள்ளமுடியும்.

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக நிதிக்கிளையில் பணமாக உடன் செலுத்தி அன்றைய தினமே பொருட்களை முழுமையாக எடுத்துச்செல்லுதல் வேண்டும்.

**குறிப்பு : மீளளிப்புச்செய்யக்கூடிய தொகையை செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்றவர்கள் மாத்திரமே ஏலவிற்பனையில் கலந்து கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.**

**பதிவாளர்,**
***யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்***

(C-5995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் மருத்துவமனைகள்!

## விரைந்து நன்கொடை வழங்குங்கள்!

### மருத்துவர்கள் மீண்டும் கூட்டாக கோரிக்கை

(கொழும்பு)

**நாட்டின் பல மருத்துவமனைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நன்கொடையாளர்களிடமிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன என மருத்துவர்கள் மீண்டும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் மருத்துவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

புற்று நோயாளர்களுக்கான 43 மருந்துகள் உட்பட 140 மருந்துகளுக்கான தட்டுப்பாட்டை நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு எதிர்கொள்கின்றது. மருந்துத் தட்டுப்பாடு சுகாதார சேவைகளை முடக்கியுள்ளது. இதனால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தட்டுப்பாடாக உள்ள மருந்துகளை பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுகள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன என சுகாதார அமைச்சால் தெரிவிக்கப்படுகின்றது.

ஆபத்தில் சிக்குண்ட மக்களைக் காப்பாற்ற சுகாதார அமைச்சு தவறுகின்றது.

நோயாளர்களுக்கான சிகிச்சை தாமதமானால் மருத்துவர்களால் எதனையும் செய்ய முடியாது. எனவே மருத்துவமனைகளுக்கு நன்கொடைகளை வழங்க ஆர்வமுடையோர் விரைந்து செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தனர். (நி)

## 36 ஆயிரம் பேருக்கு மின் இணைப்புகளை வழங்க முடியவில்லை - மின்சாரசபை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில், 36 ஆயிரம் மின் இணைப்புக்களை வழங்க முடியாதுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் விநியோகத்துக்கு அவசியமான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, வங்கிகளில் நாணயக் கடிதங்கள் விடுவிக்கப்படாமையால், இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள் ளார்.

நாடுமுழுவதும், பொதுமக்கள் கோரியுள்ள 36 ஆயிரம் மின் இணைப்புகளும் கைத்தொழில் துறைக்கான ஆயிரத்து 200 மின் இணைப்புகளும் வழங்கப்படவில்லை.

மின்பிறப்பாக்கி, வயர், மீற்றர் என்பனவற்றைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது. இதன் காரணமாக பாரிய நட்டம் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## பாரிய பணிப்புறக்கணிப்பிற்கு தயாராகும் தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரிக் கொள்கை மற்றும் மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளன.

இதற்கமைய எதிர்வரும் முதலாம் திகதி தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெற்றோலியம், துறைமுகம், நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரம் ஆகிய தொழிற்சங்கங்களே இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளன.

மருத்துவ, பொறியியலாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம், வங்கிகளின் தொழிற்சங்க சம்மேளனங்கள் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவினை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சக்திவலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் ஆபத்தில்லை

### அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

இலங்கையின் தேசிய சக்தி வலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் இலங்கைக்கு ஆபத்து இல்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய சக்தி வலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எங்கள் நாட்டில் சக்தி வலு பாதுகாப்பு காணப்படுவதை உறுதி செய்வதே ஒரு அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் முன்னெடுக்க வேண்டிய முதல் நடவடிக்கை.

சக்திவலு பாதுகாப்பு என்பது உணவு பாதுகாப்பு, மருந்து பாதுகாப்பு உட்பட அனைத்துடனும் தொடர்புபட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார். (நி)

## இந்தியாவில் மீண்டும் நிலநடுக்கம்

(டில்லி)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் நேற்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 3.6 ஆக பதிவானதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 5 மணியளவில் கத்ரா நகரில் இருந்து 97 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. (நி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 30.10.1951

இறப்பு 22.02.2022

அமரர். திருமதி

**கணேசலிங்கம் ஐயா சரஸ்வதியம்மா**

(திதி:மாசி மாத அபரபட்ச திரயோதசி)

எங்கள் தெய்வமாய் வாழ்ந்தாய் நீயே
என்றும் அன்பினை பொழிந்தாய் தாயே
உங்கள் மறைவினால் உணர்விழந்தோமே
ஒன்று ஆண்டென போனது தாயே
உங்கள் நினைவினால் வாடுகின்றோமே
உயிரின் மேலென திகழ்ந்த எம் தாயே

**கணவன், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



அமரர்.செல்வி

**தேவசிகாமணி சறோஜினிதேவி**

நிமிடங்களில் வாழும்
உயிரே, உணர்வே
என்றும் எமது வாழ்வில்–உன்
நினைவே...

திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தாளராக பணிபுரிந்த அமரர்.செல்வி தேவசிகாமணி சறோஜினிதேவி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (18.02.2023) சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவரின் வீட்டுப்பூஜையிலும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், சக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

077 913 8996

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்ட போட்டி அரியாலை அணி சம்பியன்



மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் தமது 50ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்திய 40 வயதுக்கு மேற்பட்ட கர பந்தாட்ட தொடரில் அரியாலை ஐக்கிய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞன் அணி மோதியது.

முதலாவது செற்றில் பலத்த போராட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞன் அணி 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆனால் அடுத்த 3 செற்களிலும் அரியாலை ஐக்கிய அணி 25:16,25:20, 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (4-6-90)

## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் தெரிவுப் பரீட்சை இன்று

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தால் வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் இன்று காலை 9 மணிக்கு யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்கு வருகை தந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (4-6-90)




வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் வலைப்பந்தாட்டத் தொடரில் நேதாஜி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (படம்:-கனகராஜா)

# மாசி மாத இராசி பலன்கள் 13.02.2023-14.03.2023

## தனுசு

**எதிலும் உண்மையை அறிந்து செயற்படும் தனுசு இராசிவாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு சுக ஸ்தானத்தில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியைக் கேது பார்க்கிறார். தொழில் ஸ்தானாதிபதி புதன், சனியோடு தனஸ்தானத்தில் கூடியிருக்கிறார். எனவே தொழில் முன்னேற்றம் உண்டு. உங்கள் இராசிநாதன் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களில்பதிவாகின்றது. எனவே சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். ஏழரைச் சனியில் பாதச் சனியின் ஆதிக்கம் நடக்கிறது. எனவே பொருளாதார நிலை உயரும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 6, 11 இற்கு அதிபதியான சுக்கிரன், உச்சம் பெற்று குருவோடு இணையும் போது எதிர்பார்த்த இனிய மாற்றங்கள் வரலாம். குறிப்பாக மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களுக்கு ஆதரவு தருவர். உத்தியோகத்தில் கூடுதல்சம்பளம்தருவதாக சொல்லி, வெளிமாநிலங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். அதை உங்கள் வசதியைக் கருத்தில் கொண்டு பயன்படுத்திக் கொள்வது நல்லது.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆ ம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது திருமண முயற்சிகள் கைகூடும். கடமையைச் செவ்வனே செய்வீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். தொழிலில் பங்குதாரர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். வெளிநாட்டு வணிகம் லாபம் தரும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மாசி 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு சப்தமாதிபதி நீச்சம் பெறும் பொழுது, வாழ்க்கைத் துணையின் உடல் நலத்தில்கவனம் தேவை. மருத்துவச் செலவுகள் கூடும். தொழில் மந்த நிலையில் இருக்கும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுப்பர். வேறு வேலைக்குச் செல்லலாமா? என்று சிந்திப்பீர்கள்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மேஷ இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்குஅதிபதி, 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது, பிள்ளை களின் வேலைக்காக எடுத்த முயற்சி பலன் தரும். பூர்வீகச்சொத்துத் தகராறு கள் அகலும்.பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும்.உடன் பிறந்தவர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பொதுவாழ்வில் இருப்பவர்கள் இழந்த பதவியை மீண்டும் பெறுவர்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மிதுன இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அங்கிருந்து மகரத்தில் உள்ள சனியைப் பார்க்கப் போவதால் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. குடும்பச் சுமை கூடும். மற்றவர்களுக்காக நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாகத் தெரியும். உத்தியோகத்தில் திடீர் மாற்ற ங்கள் வரலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் இராசிநாதன் குரு பலம் பெற்றிருப்பதால் குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். கணவன் - மனைவிக்குள் அன்பும் ஆதரவும் பெருகும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். அவர்களின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கலாம். மேலதிகாரிகள் கேட்ட சலுகைகளையும் வழங்குவர். செவ்வாய், சனி பார்வைக் காலத்தில் [illegible] படுவது நல்லது.

## மகரம்

**முயன்றால் முடியாதது இல்லை என்று எடுத்துரைக்கும் மகர இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி புதனுடன் கூடி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். வெற்றிகள் ஸ்தானத்தில் குரு வீற்றிருக்கிறார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. எனவே வரவு வருவதற்கு முன்னரே செலவு காத்திருக்கும். அஷ்டமாதிபதி சூரியன் 2 இல் இருப்பதால் குடும்பப் பிரச்சினை அதிகரிக்கும். எனவே கவனமாக செயற்படுங்கள். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடமான சுக ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் அடிக்கடி ஆரோக்கியத்தில் தொல்லை உண்டாகும். மருத்துவச் செலவு கூடும். ஜென்மச் சனியின் ஆதிக்கத்தால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. சகாய ஸ்தானத்தில் இருக்கும் குருவின் பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிவதால் சுபச்செலவுகள் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். சனியின் பலத்தால் காரியத்தடை ஏற்படாமல் இருக்க அதற்குரிய பிரத்யேக வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 5, 10 இற்கு அதிபதியான சுக்கிரன், உச்சம் பெறுவது யோகம்தான். தொழில் முன்னேற்றம் திருப்தி தரும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். அவர்களின் கல்வி மேற்படிப்பு, உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்து பிரச்சினைகளில் சாதகமான சூழல் அமையும்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பது நன்மையைத்தரும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் கேட்ட சலுகைகள் கிடைக்கும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். முன்னோர்கள் கட்டி வைத்து சிதிலமடைந்த கோவில்களை சீரமைக்கும் வாய்ப்பு சிலருக்கு வாய்க்கும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மாசி 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். 6 இற்கு அதிபதி நீச்சம் பெறுவது நன்மைதான். "படித்து முடித்தும் வேலையில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்பு வரலாம். மனக் குழப்பம் அகல நண்பர்கள் வழிகாட்டுவர்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான சுக்கிரன், 4 ஆம் இடத்திற்கு வரும் பொழுது தொழில்வளம் சிறப்பாக இருக்கும். வங்கிகளின் ஒத்துழைப்பு, வள்ளல் களின் ஒத்துழைப்பு கிடைத்து தொழிலை வளப்படுத்திக் கொள்வீர்கள். பிள்ளை களின் கல்யாணக் கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சி கைகூடும். பணியாளர் களின் தொல்லை அகலும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். இடமாற்றம் மகிழ்ச்சி தரும்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அங்கிருந்து கொண்டு மகரத்தில் உள்ள சனியைப் பார்க்கப் போகிறார். இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. பிரச்சினைக்கு மேல் பிரச்சினைகள் வந்து அலை மோதும். வீண் விரயம் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டபடி செய்ய இயலாது. ஆரோக்கிய தொல்லை யும் வைத்தியச் செலவும் ஏற்படும். உத்தி யோகத்தில் ஒரு சிலருக்கு பணிநீக்கம் செய்யப்படும் அளவிற்குகூட பிரச்சினைகள் வரலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**


இம்மாதம் ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் விரயங்கள் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் மீது குற்றம் சுமத்துவர். இடமாற்றம், உத்தியோக மாற்றம் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பணிபுரியும் இடத்தில் உழைப்பிற்கேற்ற அங்கீகாரம் கிடைக்காது. உங்களிடம் ஒப்படைத்த பொறுப்புகளை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமான் தேர்வடம் பிடித்து இழுப்பவர்கள் வாழ்த்தும் சிவநாமமும் பல வாத்தியங்களும் முழங்க
## சோமாற் கந்தன் அருள் கோலம் கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமான் திருவீதி எழுந்தருளி உலா வருக

இலங்கையில் இங்குதான் 1008. சகஸ்ரதள சிவலிங்கம் உள்ளது அருள் சிவலிங்கம்
ஒருமுறை சிவ சிவ என சுற்றினால் 1008 தரம் சுற்றிய பலன் கிடைக்கும்.



அழகி னழகன் கருணை வடிவ
அடரர்க் கரசன் தன்னுடன்
அழகி னழகி யுலகு நிகழ
விடம் மர்ந்தி லங்கிட
இளைய முருக னடுவி லங்க
எடுத்த வருளின் மூர்த்த மெம்
விழிகள் குளிரத் தேரி வர்த்து
வீதி வருக வருகவே.

அடியவர்களுக்கு வருகின்ற துன்பங்களை நீக்கியருளுகின்ற ஐந்து கரங்களை உடைய பிள்ளையார் தேர் முன்வர உலா வருக 'ஓம் கணபதியே நம' அழகானவற்றுக்கெல்லாம் மேலான அழகுடையவனும், கருணையே திருமேனியாகக் கொண்டவனும், ஆகிய சிவபெரு மான் தன்னோடு, அழகுடைய உமையம்மையார் உலகம் நடைபெறும் பொருட்டு இடப் பக்கத்திற் பொருந்தி விளங்கு இளைய பிள்ளையாராகிய முருகப்பெருமான் இருவருக்கும் நடுவே பொருந்தி விளங்க அதிமிகு அருள் வெளிப்பாடான சோமாற்கந்தன் அடியோர்களது கண்கள் குளிருமாறு தேரில் எழுந்தருளி, தீராத பிணியினாலும் நீங்காத வறுமையினாலும் பலவிதமான துன்பங்களாலும் வருந்தி நிற்கும் மெய்யடியார்கள், நோயும், வறுமையும் இல்லாத சிவவாழ்வினை அருள உலா வருக "ஓம் நமசிவாய"

சரவணப் பொய்கையில் வளர்ந்த இளமையுடையவனே, நகுலேஸ்வரப்பெருமான் மைந்தனே, எண்ணில்லாத உயிர்களைக் காக்கும் நகுலாம்பிகையின் குழந்தையே, அழகு மிகுந்த தேரில் எழுந்தருளி, வளமிக்க அழகிய மாலைகளை அணிந்த வள்ளி, தெய்வநாயகியாருக்கும் தலைவனாகிய கடப்பமாலை அணிந்த

"தீயவை புரிந்தாரேனுவ் குமரவேல்
திருமுன் உற்றான் தூய்மை உடையவராகி
மேன்மையான அளவில்லாத் திரு அருள்
அமுதக் கடலே முருகா உலா வருக
வருக வருக "ஓம் கந்தா ஓம் கடம்பா ஓம் குமரா"

சோமாற்கந்த வடிவம் அருள் வடிவமாதலின், சரியை முதலிய நான்கு படிகளிலும் நின்ற மெய்யடியார்கள், நியமந் தவறாது வழிபடுகின்றவர்களிடத்துத் திருவருள் மிகுதியாகப் பதிந்து வீடு பேற்றையருளும் "ஓம் நமசிவாய" மகப்பேறு (பிள்ளைப் பேற்றை) விரும்பியவராயினும் "கண்ணுதற் பெருமானும்" (சிவபெருமான்) நானும் (இமையவல்லியாகிய உமையம் மையார்) எமது அன்பே வடிவமான முருகனும் கலந்து நின்றதாகிய சிறந்ததாகக் கருதப்படும் இந்த சோமாற்கந்த வடிவைப் பூசித்தால் மகப்பேறடைவர். ஓம்நமசிவாய என்று உமை யம்மையார் திருமாலுக்குச் சொல்லியருளிய உண்மை வாசகம் "ஓம் நமசிவாய"

**நன்றேயருளும் சிவன் இரா ஓம்நமசிவாய**

மூர்த்தி,தலம், தீர்த்தம் எனும் சிறப்பைக் காட்டும் சிவபூமியாகிய இலங்கையில் கீரிமலை நகுலேஸ்வரம், தென்கையிலாயம் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், சிவதிண்ண புரம் ஈழத்துச் சிதம்பரம் மற்றும் அனைத்து சிவத்தலங்களில் "சிவராத்திரி விரதம்" அனுஷ் டித்து நான்கு சாமமும் நித்திரரையின்றி சிவனுக்குப் பூசை செய்தல், ஐந்தெழுத்து ஓதல், தேவார, புராணங்கள் படித்தும் கேட்டும் சிவ வழிபாட்டைச் சிவ சிந்தனையுடன் செய்தல்

"ஓம் நமசிவாய"

சிவபூமியில் (இலங்கை) சிவனை வைத்து வழிபட்டால் தண்மாலயம் திருமூலர் 2747

மேருநடுநாடி மிக்க இடை பிங்கலை
கூரும் இவ் வாளின் இலங்கை குறி உறும்
சாரும் திலைவனம் தண்மாலயத்து ஊடு
ஏறும் சுழுமுனை இவை சிவ பூமியே

புவியின் தொடர்பு இல்லாது விளங்கும் தீவான இலங்கை போல் உடம்பின் தொடர்பு இல்லாது திகழும். ஆதலால் இதயமும் சக சிரதளமும் எனும் இரண்டும் சிவபெருமான் விளங்கும் இடமாகும். இலங்கைத் தீவு நிலத்தின் தொடர்பு ஏதும் இல்லாது நான்கு பக்கமும் நீர் சூழ இருப்பது தண்மாலயம் சீவர்களின் வெம்மையைப் போக்கும் சந்திரமண்டல உச்சியில் விளங்கும் துவாத சாந்த ஒளி இறைவனை இதயத்தில் வைத்து வணங்குவது கிரியை நெறி, தலையின் உச்சியில் நினைத்து வழிபடுவது ஞான நெறி இவ்விரண்டும் சிவபூமியாம் இலங்கை.

சிவபெருமானுடைய அருட்குறிப்பால் உமைஅம்மை சுவாமியை அழைத்துக் கொண்டு ஓர் அருள்மிகு மரத்தடியில் அமர்ந்து தேவி காலோருத்திரம் அருள அந்த மரத்தில் மேலிருந்து ஒரு முசுக்களை (ஆண்குரங்கு) மரத்தின் இலைகளை ஆய்ந்து கீழ் இருந்தவர் கள் மீது போட்டது. இதனால் அம்பிகை சிவசிந்தையாக ஆவேசமாக நோக்க பெருமான் முக்கண்ணன் "தேவி" 84 ஆயிரம் யோனிபேதங்களும் உன் குழந்தைகள்தானே எனக் கூறி சாந்தப்படுத்த அம்பாள் அருள் நோக்கு முசுவின் மும்மலம் அழிந்தது. எமக்கு பிரிதியான வில்வ பத்திரத்தால் அருட்சனை செய்தாய் அதுவும் இன்று சிவராத்திரி நாளும் ஆகும். நீ பூமியில் அரசனாகப் பிறந்து அரசாள்வாய் என வரமும் அருளினார்.

திருமாலும் பிரமனுந் தாமே பரம்பொருள் எனத் தனித்தனி செருக்குற்றுப் போரிட்ட காலத்து, அவர்களது அறியாமையைப் போக்க உண்மையை உணர்த்துதற்குப் பரம் பொருளாகிய சிவபெருமான் (உண்ணாமலை அண்ணாமலை நினைக்க முத்திரும் ஓம் நமசிவாய) அவர்களுக்கிடையில் நெருப்பு மலையாகத் தோன்றிய இரவும் சிவராத்திரி.

முன்னொரு கற்பத்தில் உலகம் பிரளயம் மூடிய அந்த இராத்திரியில் மண்ணுயிர்கள் உய்யும் பொருட்டுச் சிவ சக்தியாகிய அருள்மிகு உமாதேவியார் நான்கு சாமமும் சிவபூசை செய்து புலரிக் காலத்திற் சிவபெருமானை நோக்கித் தாம் வழிபட்டு இந்த இரவு சிவராத்திரி (சிவனிரா) ஆக வேண்டும் என்றும் இந்த நாளில் விரதமிருந்து நான்கு சாமமும் பூசை செய்பவர்கள் வீடு பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய சிவபிரான் அவ்வாறே வரங் கொடுத்தருளினார். ஓம் நமசிவாய

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கணிசமான இடர்களையும் பல கோணங் களிலிருந்தும் அவ்வப்போது நேர்ந்த அழிவுகளிலிருந்து மீண்டும் மீண்டும் நிமிர்ந்தெழுந்து உயிர்ப்புடன் திகழ்வது சிவபூமியாகும். இந்த இலங்கையில் உள்ள திருத்தலங்களை அனைத்து அடியார்களும் சிவசக்தியாகிய உமையம்மையின் "நன்றேயருளும் சிவனிரா" சிவ வழிபாட்டைச் செய்து சிவ நெறிவளர்க்கும் தலமாகப் பேணிப் பாதுகாத்து தேசியம் காக்க தெய்வீகம் வளர்க்க ஒவ்வொரு தனிமனிதனும் சிவராத்திரியில் சிவனைப் பிரார்த்திப்போம் "ஓம் நமசிவாய"

உலக வாழ்வில் துன்பம் உண்டாகும் பொழுதும் உள்ளம் தளராத இறைவனையே போற்றுதல் வேண்டும். இறைவன் ஆணையின்றி எதுவும் இவ் உலகத்தில் நிகழாது மறைகட்டு எல்லாம் தலையாய திரு ஐந் தெழுத்தினை உருவேற்றிப் போற்று வோர் இறைவன் கழல் அடைவர் இறைவன் அடியார்களை மீண்டும் பிறவாது காத்து அருள்வான் ஓம் நமசிவாய.

(சி-5985)

க.கு.க.சிவபாலன் (K.K.K)
திருத்திண்ணரைச் சிவத் தொண்டன்



# வங்கி வட்டி வீதங்களை குறைக்க ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

படிப்படியாகக் குறையும் பணவீக் கத்துக்கு ஏற்ப, வங்கி வட்டி வீதங் களைக் குறைப்பது குறித்து ஆலோ சித்து வருவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன்திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் நடை முறைப்படுத்தப்படும் என எதிர் பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

சிறிய மற்றும் பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர் பில் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட் டுள்ளார். (ந)

# மின்கட்டண அதிகரிப்பை எதிர்த்து எரிசக்தி அமைச்சு முன் போராட்டம்



(கொழும்பு)

மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சிற்கு முன்பாக மக்கள் போராட்டத் தின் பிரஜைகள் குழுவினால் நேற்று சத்தியாக்கிரக போராட் டம் முன்னெடுக்கப்பட் டது. (ந)

# இராசிபலன்

18.02.2023
மாசி 06, சனிக்கிழமை
திரயோதசி மாலை 6.27 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 4.08 மணிவரை

சுபநேரம் 3.32-5.02 மணிவரை
இராகுகாலம் 9.32-11.02 மணிவரை
சந்திராஷ்டமம் - திருவாதிரை, புனர்பூசம்

சனிப்பிரதோச விரதம்
மஹா சிவராத்திரி விரதம்.

வளவன்



**மேஷம்** கனவுப் பலிதமுண்டு, வெளியூர்த் தொடர் புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, செயற் பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள்.



**ரிஷபம்** மனக்குழப்பம் அக ன்று மதிப்பும் மரி யாதையும் உயரும், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.



**மிதுனம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கி யத்தில் அக்கறை தேவை, எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதில் தாமதங்கள் ஏற் படலாம்.



**கடகம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இம்பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன் னேற்றம் காணும் நாள்.



**சிம்மம்** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நோயிலி ருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட் டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**கன்னி** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மைத் துனர் வழியில் ஒத்து ழைப்புக்கள் கிடைக் கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.



**துலாம்** வீட்டுக்குத் தேவை யான பொருட்களை வாங்கி மகிழும் வாய் ப்புண்டு,நம்பி வந்த வர்களுக்கு கைகொடுத்து உதவு வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



**விருச்சிகம்** பாராட்டும், புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும், காரிய அனுகூல முண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.



**தனுசு** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய் திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப் பங்கள் நிறைவேறும் வாய்ப் புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.



**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை யடைவீர்கள், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள்.



**கும்பம்** உறவினர்கள் நலன் கருதிய சுபசெலவுகள் ஏற்படலாம், சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட் டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.



**மீனம்** வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும், ஊக்கத்தோடும் உற்சா கத்தோடும் செயற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்..

அன்புள்ள மனம் சலனமற்று ஓடும் நதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் மதுபான நிலையம்; பொது அமைப்புகள் எதிர்ப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரியில் உணவகத்துடன் கூடிய மது விற்பனை நிலையம் பொது அமைப்புகளின் அனுமதியின்றி திறந்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 12 ஆம் திகதி குறித்த உணவுடன் கூடிய மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இதற்கான சம்மதங்களை இப்பகுதி பொது அமைப்புகள் வழங்கவில்லை. பூநகரி பிரதேச சபையும் இதற்கான அனுமதியினை வழங்காத நிலையில் உணவுடன் கூடிய மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியினை வழங்கியவர்கள் தொடர்பாக இப்பகுதி பொது அமைப்புகள் ஆராய்ந்து வ்ருகின்றன. மக்கள் செறிந்து வாழும் பகுதியில் குறிப்பாக பூநகரி பிரதேச மருத்துவமனை, பூநகரி பிரதேச செயலகம், பூநகரி மகா வித்தியாலயம் ஆகியவை அமைந்துள்ள சூழலில் இம் மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம் மது விற்பனை நிலையத்திற்கு எதிராக போராட்டம் நடத்துவதற்கு இப்பகுதி பொது அமைப்புகள் தயாராகி வருகின்றன. (4-6-350)

# சட்டவிரோத மீன்பிடியை முற்றாக தடை செய்யுங்கள்

## வடமராட்சி கிழக்கு மீனவர்கள் வலியுறுத்து

(கரணவாய்)

தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதால் சிறு தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் அதை உடனடியாக தடை செய்யுமாறும் இல்லையேல் மருதங்கேணி பிரதேச செயலகத்தை முடக்கி போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி வடமராட்சி கிழக்குப் பகுதியில் தொழில் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

இதன் காரணமாக சிறு தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இது தொடர்பில் பல தடவைகள் தெரியப்படுத்தியும் எந்தவொரு அதிகாரிகளாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என நேற்று வெள்ளிக்கிழமை காலை மருதங்கேணி பிரதேச செயலக வாயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் குற்றம் சுமத்தினர்.

போராட்டத்தின் நிறைவில் மருதங்கேணி பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் திருமதி. குகநாதன் இந்துமதியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் நிறைவடைந்தது.

போராட்டத்தின் பின்னர் மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது தடை செய்யப்பட்ட இஞ்சி குறைவான வலைகளை பயன்படுத்தி சிறு மீன்களையும் பிடித்து அதனை கடலில் கொட்டி வருவதாகவும் மேலும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறியும் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதனாலும் சிறு தொழிலாளர்களான தாங்கள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இத்தொழிலினை உடனடியாக நிறுத்தி நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலைக்குள் சாதகமான ஒரு முடிவினை தமக்கு அறிவிக்குமாறும் இல்லையேல் மருதங்கேணி பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் தொடரும் என மீனவர்கள் தெரிவித்தனர். (4-6-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 240 | 280 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 280 | 300 |
| தக்காளி | 260 | 200 | 180 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 240 |
| கோவா | 80 | 70 | 100 | 100 |
| கரட் | 160 | 180 | 200 | 250 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 140 | 150 | 200 |
| வாழைக்காய் | 160 | 170 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 170 | 150 | 200 |
| பாகற்காய் | 320 | 450 | 350 | 600 |
| வெண்டக்காய் | 450 | 300 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 650 | 450 | 600 |
| லீக்ஸ் | 220 | 280 | 250 | 300 |
| பீற்றூட் | 180 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 750 | 700 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 1500 | 2400 | 1200 | 2000 |
| போஞ்சி | 350 | 350 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 100 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 150 | 150 |
| தேசிக்காய் | 240 | 150 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 250 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 100 | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 70 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 100 |





மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு
நகுலேஸ்வர ஆலய முன்றலில்
மகாலேஸ்வரர் ஜோதி லிங்க தரிசனமும், இராஜயோக தியானக் கண்காட்சியும், மனக்குறை தீர்க்கும் யாககுண்டமும்.

காலம்:-
17.02.2023 : வெள்ளி, பி.ப 04 முதல் இரவு 08 மணி வரை
18.02.2023 : சனி, சிவராத்திரி தினம் காலை 08 மணி முதல் இரவு முழுவதும்
19.02.2023 : ஞாயிறு, காலை 08 மணி முதல் இரவு 08 மணி வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஏற்பாடு: பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்கள்
021 222 6432/077 452 1070
(C-5992)





சிவமயம்
ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் கோவில்
யாழ் பல்கலைக்கழகம்
மகா சிவராத்திரி விழா-2023
18/02/2023

| விடயம் | அபிஷேக நேரம் | பூசை நேரம் | உபயம் |
|---|---|---|---|
| சனிப்பிரதோஷம் | 3.30 | 5.00 | இந்துக் கற்கைகள் பீடம் |
| மகா சிவராத்திரி 1 ம் சாமம் | 6.00 | 7.30 | சித்த மருத்துவத் துறை |
| மகா சிவராத்திரி 2 ம் சாமம் | 9.00 | 10.30 | மருத்துவ பீடம் |
| மகா சிவராத்திரி 3 ம் சாமம் | 12.00 | 1.30 | விஞ்ஞான பீடம் |
| மகா சிவராத்திரி 4 ம் சாமம் | 3.00 | 4.30 | கலைப்பீடம் |

கலை நிகழ்வுகள்

| நிகழ்வு | நேரம் | பங்கேற்பாளர்கள் |
|---|---|---|
| திருமுறை இசை அரங்கு | 8.00 | இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம் |
| கவியரங்கம் | 10.10 | விஞ்ஞான பீட மாணவர்கள் |
| சிறப்பு உரை | 11.00 | துணை வேந்தர், யாழ் பல்கலைக்கழகம் |
| பரிசளிப்பு நிகழ்வு | 11.10 | சைவசிந்தாந்தத் துறை |
| சிவதர்சனம் நாட்டியம் | 11.20 | சித்த மருத்துவ துறை மாணவர்கள் |
| கதாப்பிரசங்கம் | 1.10 | மாணவி, கலைப்பீடம் |
| பட்டிமண்டபம் | 2.00 | இந்துக் கற்கைகள் பீட மாணவர்கள் |



ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபையும் யாழ் பல்கலைக்கழக இந்து மன்றமும்
(14634)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

## திருமதி. சிவமலர் சுந்தரபாரதி

(Sc.Trd,B.A, Dip. IN.Edu, MED, SLPS-I)


அதிபர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்



வட்டுக்கோட்டையின் திருமகள்
வடமராட்சியின் மருமகள்
வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
வடித்தெடுத்த மாணவி
பட்டங்கள் பல பெற்ற
பண்புமிகு சீர்மியர்

ஆற்றல் மிகு பேச்சாளர்
அற்புத வளவாளர்
கவித்துவம் மிக்க கவிதாயினி
கம்பீர நடையால் கண் அசைவால்
மாணவரை வழிநடத்தும்
மாண்புறு கற்பிக்கும் அதிபர்

நல்லாசிரியர் விருது
நல்லதிபர் "குருபிரதீபா" விருது
தந்தை செல்வா நற்பணிமன்ற விருது
ஐந்து குருமார் உயர் விருது
கல்வியாளர் "கல்விஒளி" விருது
கண்ட கல்வி ஒளி நீ...



ஆற்றல் மிகு கோகிலா மகேந்திரனை குருவாகி
ஆற்றுப்படுத்தும் உளநல கல்வி விருப்புடன் கற்று
"ஆறுதலிலும்" இணைந்து அரும்பணி செய்தாய்
அருமையான பந்தி எழுத்துக்களை படைத்தாய்
"அனை" யிலும் தலைமை பணியும் புரிந்தாய்
அபலைகளுக்காக முதியோர் இல்லத்திலும் சேவை செய்தாய்
மாணவியின் கல்லீரல் மாற்று சிகிச்சைக்காக
கையேந்தி தேசத்தின் சாதனையில் பங்கு கொண்டாய்



நேர முகாமையை நேர்த்தியாகக் கடைப்பிடித்து
மாணவர் வரவொழுங்கில் சாதனைபடைத்து
மாணவர் நலம் ஒன்றே முதன்மையாக்கினாய்
பெற்றோரை கௌரவிக்கும் பெற்றோர் தினம்
பெருமைமிகு உளநல பேர் உரைகள்
நற்பிரஜைகள் உருவாக்கம் நமது பங்கு என
நற்பணிகள் நாள்தோறும் சோர்வின்றி ஆற்றினாய்

மூளாய் கிராமத்தின் ஓர் மூலையில்
மூர்க்கமான உன் முயற்சியால்
முன்னிலைக் கல்விக் கூடமாய்
தேசியத்தில் சாதனைகள் பல படைத்து
மூளாய் சைவப்பிரகாசத்தை மிளிர வைத்தாய்
ஆசிரியராய்–உப அதிபராய் – அதிபராய்
அரும்பணியாற்றி நூற்றாண்டு கண்ட
சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அன்னையுமானாய்

ஐம்பத்தொண்பது வயதில்
விருப்புடன் ஓய்வு பெற்று
மாசித் திங்கள் பதினெட்டாம் நாள்
நிறைவுடன் அரச பணியில்
விடைபெறும் பிரிய தோழி
சமூக – சமய – கல்வி – உளநல
பணிகள் என்றும் தொடர்வாய்
வாழி... நீ பல்லாண்டு ... வாழியவே!

(14624)

**பிரியத்துக்குரிய, புலம்பெயர்ந்து வாழும் தோழிகள்.**

---

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்
## மக்கள் வங்கி
## சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்.ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பழை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும், யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1000/- ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2023 பங்குனி 08 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணி வரை எந்தவொரு வார நாளிலும் மு.ப 9.00-பி.ப 4.00 மணிவரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2023 பங்குனி 09 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக் கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல:82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Fax :021 222 2602
E-mail :jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல :021 222 2601 / 021 222 8602

(c-5994)

---

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டு கொண்டு இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

* உடல் நலத்திற்கு ⇒ எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு ⇒ சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு ⇒ தியானப்பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு ⇒ அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட ⇒ தற்சோதனைப் பயிற்சிகள்

**காலம் :** 18.02.2023 சனிக்கிழமை தொடக்கம்
24.02.2023 வெள்ளிக்கிழமை வரை

**நேரம்:** மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

**பயிற்சிகளை வழங்குபவர்கள் :**
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி மு.சுபாஷினி அவர்கள் (இந்தியா)
துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமாரன்
துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(ள-5991)

**தொடர்புகளுக்கு**
**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல 81 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 106





தஞ்சைக் கோட்டைக்குள்ளே அப்போது சுந்தர சோழ சக்கரவர்த்தியையும் அவருடைய அரண்மனைப் பரிவாரங்களையும் தவிர, இன்னும் முக்கியமாக யார் யார் இருக்கிறார்கள் என்று விசாரித்தான். பெரிய பழுவேட்டரையர், சின்ன பழு வேட்டரையர் இவர்களின் மாளிகைகளும் பரிவாரங்களும் அங்கு இருந்தன.

தன பொக்கிஷம், தானிய பண்டாரம் இரண்டும் கோட்டைக்குள் இருந்தபடியால் அவற்றைப் பரிபாலிக்கும் அதிகாரிகளும் கணக்கர்களும் இருந்தார்கள். சுந்தர சோழரின் அந்தரங்க நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் பாத்திரரான அநிருத்த பிரம்மராயர் என்னும் அமைச்சரும், திருமந்திர ஓலை நாயகரும் கோட்டைக்குள்ளேதான் வசித்தார்கள். மற்றும் சின்னப் பழுவேட்டரையரின் தலைமையில் தஞ்சைக் கோட்டையைக் காவல் புரிந்த வீரர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் அங்கேயே தங்கியிருந்தார்கள்.

பொன், வெள்ளி நகை வியாபாரிகளும் நவரத்தின வியாபாரி களும் பொன்னாசாரிகளும் கோட்டைக்குள் இடம் அளிக்கப்பட்டிருந்தார்கள். பெரிய பழுவேட்டரையரின் கீழ் வரி விதிக்கும் வேலை பார்த்த நூற்றுக்கணக்கான அலுவலர்கள் இருந்தனர். துர்க்கையம்மன் கோயில், கோட்டைக்குள்ளேதான் ஒரு மூலையில் இருந்தது. கோவில் பூசாரிகளும் பணிவிடையாளரும் கணிகையரும் கோவிலுக்கு அருகில் குடியிருந்தார்கள்.

இதையெல்லாம் தெரிந்து கொண்ட பிறகு, "அமைச்சர்கள் அனைவரும் தற்சமயம் கோட்டையில் இருக்கிறார்களா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"எல்லாரும் எப்படி இருப்பார்கள்? பற்பல காரியமாக வெளியிலே போய்க் கொண்டும் வந்து கொண்டும் தான் இருப்பார்கள். அநிருத்த பிரமராயர் சில காலமாகவே நகரில் இல்லை. அவர் சேர நாடு சென்றிருப்பதாகக் கேள்வி. பெரிய பழுவேட்டரையர் நாலு தினங்களுக்கு முன்னால் வெளியே சென்றார். கொள்ளிடத்துக்கு வடக்கே நடு நாட்டுக்குச் சென்றதாகக் கேள்வி."

"போனவர் ஒருவேளை திரும்பி வந்திருக்கலாம் அல்லவா? உனக்குத் தெரியாதாக்கும்!"

"இன்று சாயங்காலம் பழுவூர் இளையராணியின் பல்லக்கு வந்தது. கோட்டை வாசலில் நானே பார்த்தேன் ஆனால் பழுவேட்டரையர் வரவில்லை. ஒருவேளை வழியில் எங்கேனும் தங்கி விட்டு நாளை வரக்கூடும்."

"தம்பி! இளவரசர் மதுராந்தகத் தேவரும் கோட்டைக்குள்ளே தானே தங்கியிருக்கிறார்?"

"ஆமாம் பழுவேட்டரையர் அரண்மனைக்குப் பக்கத்தில் மதுராந்தகரின் மாளிகை இருக்கிறது. சின்னப் பழுவேட்டரையரின் திருமகளை மணம் புரிந்த மருமகர் அல்லவா?"

"ஓஹோ! அதுவும் அப்படியா? எனக்கு இது வரையில் தெரியாதே?"

"ரொம்பப் பேருக்குத் தெரியாது தான் சக்கரவர்த்தியின் தேக அசௌகர்யத்தை முன்னிட்டுத் திருமணத்தைக் கோலாகலமாக நடத்தவில்லை."

"நல்லது; மதுராந்தகத்தேவர் இப்போது கோட்டைக்குள்ளே தானே இருக்கிறார்?"

"கோட்டைக்குள்ளே தான் இருக்க வேண்டும் ஆனால் மதுராந்தகத் தேவர் சாதாரணமாக வெளியில் வருவதில்லை.

மக்கள் அவரைப் பார்க்க முடிகிறதும் இல்லை. சிவபக்தியில் ஈடுபட்டுப் பெரும்பாலும் யோகத்திலும் தியானத்திலும் பூஜையிலும் காலம் கழிப்பதாகக் கேள்வி."

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

### உலக்கை பூஜை



(நேற்றைய தொடர்ச்சி)

செட்டியார் மனைவி வீட்டு முற்றத்தை நன்றாய்ப் பெருக்கினாள். சாணத்தைக் கரைத்துத் தெளித்து மெழுகினாள். தன் கால்களையும் கைகளையும் சுத்தம் செய்தாள்.

பிறகு, நெல்லைக் குத்துகிற உலக்கையை ஒரு மூலையிலிருந்து எடுத்து வந்தாள். அதை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து ஈரம் போகத் துடைத்தாள். அதற்கு விபூதியைப் பூசினாள். தன் நெற்றியிலும் பூசிக் கொண்டாள்.

அந்த உலக்கையை நடு வாசலில் கிடத்தினாள். அதற்கு எதிரே தரையில் விழுந்து மூன்று முறை வணக்கம் செய்தாள். ஏதோ மந்திரங்களை மெல்லிய குரலில் முணு முணுத்தாள். மீண்டும் அந்த உலக்கையை நன்றாகத் துடைத்தாள். பழையபடி முன்பிருந்த மூலையிலே கொண்டுபோய் சாத்தினாள்.

திண்ணையில் அமர்ந்திருந்த பண்டாரம் அவள் செய்வதையெல்லாம் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான். அவள் அவன் எதிரே வந்ததும், "இது என்ன பூஜையம்மா? இப்படி ஒரு பூஜையை நான் இதுவரை எங்கும் கண்டதில்லையே!" என்று கேட்டான்.

"ஐயா! இது எங்கள் குல தெய்வத்தை வேண்டிக் கொண்டு செய்கின்ற பூஜை. இது உண்மையில் விசேஷமான பூஜைதான். அதன் மகிமையை இன்னும் சற்று நேரத்தில் நீங்களே காணப் போகிறீர்கள்" என்றாள் அவள்.

அவள் அப்படிக் கூறி விட்டு, உள்ளே போகும் போது பண்டாரத்தின் செவிகளில் விழும் படியாகவே "இந்த உலக்கை பூஜை உன் தலை மேலே தானே வந்து விடியும்" என்று முணு முணுப் பாகச் சொல்லிக் கொண்டு போனாள். அவன் காதுகளில் விழ வேண்டும் என்றே அப்படிப் பேசினாள்.

அந்த வார்த்தை அவன் செவிகளில் விழுந்ததும் அந்த உலக்கையாலே தன் தலையிலே அடிக்கப் போகிறாள் அதுதான் உலக்கை பூஜைபோல் இருக்கிறது என்று பயந்து நடுங்கினான்.

அவள் உள்ளே ஓர் அறைக்குள் போனதும்; அதுதான் சமயம் என்று அவன் தப்பித்தேன், பிழைத்தேன் என்று அங்கிருந்து ஓட்டமாக ஓடிப்போனான்.

சற்று நேரத்தில் செட்டியார் கடையிலேயிருந்து திரும்பி வந்தார். தாம் அனுப்பி வைத்த பண்டாரம் எங்கே என்று மனைவியைக் கேட்டார்.

அவள் அவருக்கு உண்மையைச் சாமர்த்தியமாக மறைத்துச் சாதுரியமாகப் பதில் சொன்னாள்.

"அந்தப் பண்டாரம் இங்கே வந்தார். நான் அன்போடு வரவேற்றேன். அவர் உலக்கையைத் தரவேண்டுமென்று கேட்டார். நான் செட்டியார் வந்து விடுவார், அவர் வந்ததும் அவரைக் கேட்டுவிட்டுத் தருகிறேன் என்றேன். பாயை விரித்துப் போட்டு அமரும் என்றேன். அவர் ஏதோ கோபமாக உடனே இங்கிருந்து போய் விட்டார்.!"

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும். ~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொருட்களின் விலைகளை கண்டபாட்டில் கூறாதீர்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்களின் விலைகள் கண்டபாட்டில் உயர்வடைந்துள்ளமை தெரிந்ததே.

இவ்வாறு விலை அதிகரிப்புக் காரணமாக, பொதுமக்கள் மிகப்பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக ஏழை மக்கள் தமது நாளாந்த உணவுத் தேவைக்காகப் படும் பாடு சொல்லிமாளா.

நிலைமை இதுவாக இருக்கையில்,

அரச அங்கீகாரம் பெற்ற சதொச விற்பனை நிலையத்தில் சில உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றைப் பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கு ஏதுவாக, சதொச விற்பனை நிலையங்கள் போதுமானதாக இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதாவது கிராம மட்டங்களில் சதொச விற்பனை நிலையம் இல்லாதபோது அந்த மக்கள் நகரங்களுக்கு வந்து சதொச விற்பனை நிலையத்தில் பொருட்கொள்வனவைச் செய்வதென்பது ஒருபோதும் சாத்தியப்படாது.

அவ்வாறு சாத்தியப்பட்டாலும் போக்குவரத்துச் செலவு கையும் கணக்கும் சரி என்றாக்கிவிடும்.

ஆக, சதொச விற்பனை நிலையங்களினூடாக மட்டும் அத்தியாவசியப் பொருட் களின் விலைக்குறைப்பு ஏழை மக்களைச் சென்றடையாதென்பது நிறுதிட்டமான உண்மை.

இந்நிலையில் விலை குறைக்கப்பட்ட உணவுப் பொருட்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக பங்கீட்டு அட்டை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின், அதனால் அனைத்து மக்களும் நன்மையடைவர்.

ஆகையால் சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

இவை ஒருபுறமிருக்க, பொருட்களின் விலைகள் வர்த்தக நிலையங்களுக்கிடையில் கடும் வேறுபாட்டைக் கொண்டிருப்பதுதான் மிகப் பெரும் அபத்தம்.

அதாவது குறித்த ஒரு பொருளின் விலையானது வெவ்வேறு வியாபார நிலையங்களுக்கிடையில் கடும் ஏற்ற இறக்கத்தைக் கொண்டுள்ளது.

இதுதவிர, பொருட்களின் விலைகளை எழுந்தமானமாகக் கண்டபாட்டில் கூறுகின்ற நடைமுறையும் வர்த்தக நிலையங்களில் காணப்படுகிறது.

இதனால் தர்மம் இல்லாத வியாபாரம் தலைவிரித்தாடுவதைக் காண முடிகிறது.

எனவே இது விடயத்தில் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் வணிகர் கழகங்கள் அதீத கருசனை கொண்டு பொருட்கள் சேவைகளுக்கு நிதானமான விலைகளை நிர்ணயம் செய்து அறத்துடன் கூடிய வர்த்தக சேவையை ஆற்ற வேண்டும் என்பதுதான் நாம் விடுக்கும் விண்ணப்பம்.

# ரூ.160 இற்கு மேல் நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கிளிநொச்சி பிரஜைகள் குழு கோரிக்கை

(முறிகண்டி)

நெல்லை 160 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி பிரஜைகள் குழு செயலாளர் சிங்கராசா ஜீவநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெவ்வேறு விவசாயிகள் தமது உற்பத்திக்கான விலையை கேள்விக்கேற்ப மாற்றிக் கொள்கின்றனர். ஆனால் நெற்செய்கையாளர்கள் மட்டும் கொள்வனவாளரில் தங்கியிருக்கிறார்கள்.

அரசின் கொள்வனவினடிப்படையில் சந்தையில் அரிசி மலிவாக இருக்க வேண்டும். ஆனால் அரிசியின் விலையோடு ஒப்பிடுகையில் சுரண்டல் காணப்படுகிறதாகவே உள்ளது. அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரந்தன் பகுதிக்கு வந்த போது நெல்லினை 100 ரூபாவிற்கு கொள்வனவு செய்யுமாறு கூறினார். ஆனால் விவசாயிகள் அதற்கு தயாரில்லை.

இவ்வாறான நிலையில், இந்த கொள்வனவு விலையை அவர்கள் ஏற்கவில்லை என்பது புலனாகின்றது.

இந்த நிலையில், அரசாங்கம் நெல்லிற்கான விலை நிர்ணயத்தினை 160 ரூபாவிற்கு மேல் அதிகரித்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடந்தாலே விவசாயிகள் தொடர்ந்தும் விவசாயத்தில் ஈடுபடலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6-100)

## காட்டு யானைகளின் வருகையால் போக்குவரத்து, விவசாயம் பாதிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் வன்னேரிக்குளம் வீதியில் யானைகளின் நடமாட்டத்தினால் பொதுமக்களின் போக்குவரத்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது. மாலை 6 மணியளவில் 9 ஆம் கட்டைப் பகுதியில் வீதிக்கு அருகில் வரும் யானைகள் வீதியில் நீண்ட நேரம் தரித்து நிற்பதனால் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் தொடர்ந்து பயணிக்க முடியாமல் வீதியில் காத்து நிற்க வேண்டிய நிலைமை உருவாகி உள்ளது. நீண்ட நாட்களுக்கு பின்னர் குறித்த வீதிப் பகுதியில் யானைகளின் நடமாட்டம் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் யானைத் தொல்லை அதிகரித்த கிராமங்களில் ஒன்றாக வன்னேரிக்குளம் கிராமம் காணப்படுகின்றது.

இக்கிராமத்தில் நெல் அறுவடைகள் நிறைவடைந்து வரும் நிலையில் வயலுக்கு வந்த யானைகள் தற்போது கிராமத்திற்குள் நுழைந்து பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன. யானைகளின் நடமாட்டத்தினால் வன்னேரிக்குளம், குஞ்சுக்குளம், திக்காய்க்குளம் ஆகியவற்றின் அணைக்கட்டுகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் சேதமடைந்து வருவதாக வன்னேரிக்குள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.(4-6-350)

## மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சொக்கநாதர் சிவன் திருக்கோவில் மகா சிவரத்திரியை முன்னிட்டு சைவசமய அறிவுப் போட்டி நிகழ்வு சைவப் புலவர் சி.நந்தகுமார் தலைமையில் ஆலய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணியளவில் முதலாம் சாமப் பூசையைத் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

தரம் 3 முதல் தரம் 11 வரையான மாணவர்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படும்.

பாலர் வகுப்பு மற்றும் தரம் 1,2 மாணவர்களுக்கு தேவார புராணப் போட்டியும் இடம்பெற்று பரிசில் வழங்கப் படவுள்ளது. (4-6)

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு புதுநகர் சிவன் கோவிலில் இன்று சனிக்கிழமை சிவராத்திரி விழா மாலை 5 மணிக்கு பூஜைகளுடன் ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (4-6)

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவிலில் மகா சிவராத்திரி விழா இன்று சனிக்கிழமை காலை 5.30 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை விசேட பூஜைகளும் 108 சிவலிங்கங்களுக்கு அபிஷேகம் செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (4-6)

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரி விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி மூன்று சாம பூசைகள் இடம்பெறும் என ஆலய பிரதமகுரு அறிவித்துள்ளார். (4-6)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 70 ஆவது ஆண்டு விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கழக மைதானத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் உப தலைவர் வி.விஜயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

## கஞ்சாவுடன் கைதான இருவருக்கு அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவருக்கு தலா ஐயாயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியின் வெவ்வேறு பகுதிகளில் 8 மில்லி கிராம் மற்றும் 5 மில்லி கிராம் கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த இரண்டு பேரை பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து குறித்த இருவரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரையும் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து தலா ஐயாயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். (4-6-315)

## வயல் வேலியை தீயிட்டு எரித்த விசமிகள்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - குமுழமுனை - தாமரைக்கேணி பகுதியில் உள்ள வயல் காணிக்கு அமைக்கப்பட்ட வேலிக்கு நேற்று முன்தினம் இரவு தீ மூட்டி விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளதாக வயல் நிலத்தின் உரிமையாளரினால் செம்மலைப் பகுதியிலுள்ள பொலிஸ் காவலரணில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியரான வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி என்பவருடைய குறித்த வயல் நிலத்தினை அறுவடை செய்யத் தயாராக இருந்த நிலையிலேயே இவ்வாறான விஷமத்தனமான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10 வருடங்களாக குறித்த நிலத்தில் விவசாய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் இப்படியான விசமத்தனமான நடவடிக்கைகள் இதுவரை நடைபெற்றதில்லையெனவும் முறைப்பாட்டாளர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சுகாதார பணிப்பாளர், பிரதம செயலாளரை மாற்றுங்கள்

## ஜனாதிபதியிடம் விக்னேஸ்வரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார பணிப்பாளர் மற்றும் பிரதமர் செயலாளர் ஆகியோரை மாற்றுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் கோரிக்கை விடுத்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் இடையிலான சந்திப்பு யாழில் உள்ள பிரபல தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது விக்னேஸ்வரன் ஜனாதிபதியிடம் வடக்கு மக்கள் எதிர் நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக் கூறியதுடன் அவற்றை விரைவாக தீர்ப்பதற்கான வழிமுறை ஒன்றை உருவாக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் வட மாகாணத்தில் தகுதியான நிர்வாகத் தரமுடைய அதிகாரிகள் இருக்கும் நிலையில் வெளியிடங்களில் இருந்து தமிழ் மொழி தெரியாத அதிகாரிகளை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருக்கு தகுதியானவர்கள் வட மாகாணத்தில் உள்ள நிலையில் அவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். (4-6-104)

# சட்டவிரோத மணல் அகழ்வு மூவர் மடக்கிப் பிடிப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளாலிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு டிப்பர் வாகனங்கள் மற்றும் மணல் அகழும் இயந்திரம் ஆகியன விஷேட அதிரடிப்படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சந்தேகநபர்கள் மூவரும் கைதாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளையில் வியாழக்கிழமை பிற்பகல் கெற்பேலிப் பகுதியில் உழவியந்திரத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற நபர் ஒருவரும் கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)



யாழ். இந்திய துணைத் தூதரகம் மற்றும் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் இணைந்து ஏற்பாடு செய்த கர்நாடக இசை பயிலரங்கம் யாழ். மத்திய கலாசார நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன், கஜிந்தன்)

# 'நிலாச்சோறு' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் ரஜிதா அரிச்சத்திரன் எழுதிய "நிலாச்சோறு" நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் டேவிட் வீதி கலைத்தூது அழகியற் கல்லூரி மண்டபத்தில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் மேனாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

# விருந்தோம்பல் முகாமைத்துவப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற இளைஞர்,யுவதிகளின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு வடமாகண ஆளுநரின் பணிப்புரைக்கமைய, இலங்கை கடற்படையின் அனுசரணையுடன் காரைநகரில் அமைந்துள்ள ஹமன்ஹில் கடற்கோட்டையில் விருந்தோம்பல் முகாமைத்துவம் மற்றும் விடுதிப் பராமரிப்பு தொடர்பாக குறித்த துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஐந்து நாள் பயிற்சிநெறி ஒன்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்கு ஆர்வமுள்ள தரம் 11 வரை கல்வி பயின்ற 18-30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் 021 221 7311 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு 24.02.2023 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர் விபரங்களை முன்பதிவு செய்யுமாறு வடமாகாண சுற்றுலாப் பணியக் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

# பாவங்களை நீக்கி ஞானத்தை அருளும் மகாசிவராத்திரி விரதம்

உலகின் இருண்ட காலப் பகுதியான இந்த கலியுகத்தில் மக்களின் துன்பத்தை அகற்றி சந்தோசம், செழிப்பு மிக்க வாழ்க்கையை இப்பூமியில் ஏற்படுத்தித் தருவதற்கு பரமாத்மா சிவன் இவ்வுலகில் அவதாரம் செய்த மங்களகரமான நிகழ்வே 'மகா சிவராத்திரி' தினமாக கொண்டாடப்படுகின்றது.

**"உலகில் அதர்மம் தாண்டவம் ஆடும் போது மீண்டும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக நான் இப்பூவுலகில் மீண்டும் அவதரிப்பேன்"** என கீதையில் குறிப்பிட்டமைக்கு அமைய அவர் இப்புவியில் அவதாரம் செய்கின்றார்.

மனிதர்களிடம் நல்ல பண்புகள் குறைந்து, தீயகுணங்கள் (விகார குணங்கள்) அதிகரித்த இக்காலகட்டத்தில் நற்பண்புகளும் சுபீட்சமும் நிறைந்த நல்ல வாழ்க்கையை (பொன்னுலகை) ஏற்படுத்தித் தருவதே சிவ அவதாரத்தின் நோக்கமாகும்.

சாதாரண கண்களினால் காண முடியாத, ஞானக்கண்ணினால் புரிந்து, அனுபவம் செய்யக்கூடிய பரமாத்மா சிவன் நம்மைப் போன்று பிறப்பு, இறப்பு செயல்முறைக்கு உட்படாதவர்.

"ஜோதி சொரூபமான சிவன்" சாதாரண ஒரு மனித சரீரத்தில் பிரவேசம் செய்து அவரின் மூலமாக மனித ஆத்மாக்களிற்கு மெஞ்ஞானத்தைக் கொடுத்து, அஞ்ஞான இருளைப் (அறியாமையை) போக்குகின்றார். இதன் ஞாபகார்த்தமே "தட்சணாமூர்த்தி" வடிவமாகும்.

"சிவன்"என்பதன் பொருள் 'நன்மை செய்பவர்' என்பதாகும். அவர் சர்வசக்திவான், சர்வவல்லமை படைத்தவர். தந்தையாகிய சிவன் நன்மை செய்பவர். அவர் ஒருபோதும் எவருக்கும் துன்பத்தைக் கொடுப்பதில்லை. ஆனால், அவர் துன்பங்களிலிருந்து நம்மை விடுபடச் செய்கின்றார்.

அசரீரியான சிவனை நீள்கோள வடிவ ஜோதியாக, பிரகாசிக்கும் ஒளியாக, சிவலிங்க ரூபத்தில் நாம் வழிபட்டு வருகின்றோம். அவரை இலகுவாக நினைவு செய்வதற்கு இராஜயோக தியானக் கல்வி உதவுகின்றது.

சிவபெருமான் ஞானத்தில் எல்லையற்று இருப்பதைப் போன்று அவரது பெயர்களும் குணங்களும் புகழும் எல்லையற்றவையாகும்.

சிவலோகம், பரலோகம், ஆத்ம உலகம், நிர்வாணா தாமம் எனப் பல்வேறு பெயர்களினாலும் அழைக்கப்படுகின்ற ஒளி மிகுந்த இடமே சிவனது நிரந்தர இருப்பிடமாகும்."சொற்றுணை வேதியன், சோதி வானவன்.." என்ற தேவார வரிகள் இதனை நினைவுபடுத்துகின்றன.

அவரிடமிருந்து அனைத்து திவ்விய குணங்களையும் சக்திகளையும் ஜீவ ஆத்மாக்களான நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

விரதம் (உபவாசம்/நோன்பு) நமது உடலையும் ஆத்மாவைய்யும் சுத்தம் செய்கின்றது. [illegible] (சித்தம்) தூய்[illegible] னின் நெருக்கத்தை உணர வேண்டும்.

இராஜயோக தியான வழிமுறைகள் இதற்கு உதவுகின்றது.

"மாசற்ற சோதி"ஆகிய சிவன் நமது மன மாசுக்களை அகற்றுபவர். ஒருவர் வீணான/தூய்மையற்ற,தீய எண்ணங்கள், வார்த்தைகள், செயல்களிலிருந்து தன்னை விலக்கி வைத்திருப்பதற்காக உபவாசத்தை (விரதத்தை) மேற்கொள்கின்றார்.

அதன்மூலம் ஆத்மா தூய்மையாகி நிரந்தரமான அமைதி,சந்தோசம், ஆரோக்கியம் அடைய முடியும்.

எண்ணங்களே அனைத்து செயற்பாடுகளிற்கும் அடிப்படையாக உள்ளன. ஒருவர் தூய்மையான (நல்ல/ஆக்கபூர்வமான) எண்ணங்களைக் கொண்டிருப்பாராயின், அவரால் இறைவனிற்கு நெருக்கமாக இருப்பதை அனுபவம் செய்ய முடியும்.

கண் விழித்திருந்து வழிபடுவது சிவராத்திரியின் முக்கிய அம்சமாகும். அதாவது, நாம் நமது மூன்றாம் கண்ணாகிய "ஆத்ம ஞானத்தின் விழிப்புணர்வில் எப்போதும் இருக்க வேண்டும்"என்பதே அதன் அர்த்தம் ஆகும்.

தீய குணங்களான கோபம், அகங்காரம், மோகம், பேராசை.. போன்றவை நமக்குள்ளே இருந்து ஆதிக்கம் செலுத்துவதனால் ஆத்மாக்களான நமது இயல்பான குணங்களான அன்பு, அமைதி, சந்தோசம், அறிவு, தூய்மை..போன்ற பல நற்பண்புகள் பலமிழந்து விடுகின்றன.

சிவபெருமான் இப்பூமியில் அறியாமை (அஞ்ஞான) இருள் சூழ்ந்துள்ள



இக்கலியுகத்தின் இறுதிக் காலத்தில் இப்பூமிக்கு வருகை தந்து மனித ஆத்மாக்களான நம் அனைவருக்கும் உண்மையான, ஆத்ம ஞானத்தை அருளி எம்மை அறியாமை எனும் உறக்கத்தில் இருந்து விழித்தெழச் செய்து, பாவங்களைப் போக்கச் செய்கின்றார். இதனையே,"அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே" என்று சிவபுராணம் கூறுகின்றது.இதுவே மூன்றாம் கண்ணாண ஞானத்தைப் பெறுவது என்பதன் ஓர் அர்த்தம் ஆகும்.

சிவபரமாத்மா தனது அன்புக் குழந்தைகளான நமக்கு அருளிய ஆத்ம ஞானமே "இராஜயோக தியானம்" ஆகும். இராஜயோக தியானமானது, இப்பூவுலகில் நம் நல்வாழ்க்கைக்கும் சுபீட்சத்திற்குமான "வாழ்க்கைக் கல்வி" என்றால் அது மிகையாகாது.

சிவன் அருளிய சிவஞானத்தைக் கற்று, நடைமுறைப்படுத்தி நமது வாழ்க்கையை வளமாக்குவோம்.

**ஓம் சாந்தி!**

**பிரம்ம குமாரிகள்,**
**இராஜயோக நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழி...

படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பை ஒன்றினுள் மறைத்து வாளினை எடுத்து வந்த இருவரே குறித்த வாள்வெட்டினை நிகழ்த்தி விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையாற்றும் 24 வயதான குணாளன் என்ற இளைஞன் கையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் கியூ.ஆர் இன்றி எரிபொருள் நிரப்புமாறு எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்களே நள்ளிரவில் வாள் வெட்டு தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## மறுஅறிவித்தல்...

அதற்கமைய, எதிர்வரும் 22, 23, 24 மற்றும் 28ஆம் திகதிகளில் தபால்மூல வாக்கெடுப்பு இடம்பெறாது எனவும், அதற்கான உத்தியோகபூர்வ திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மூல வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் அறிவித்திருந்தார்.

எனினும், வாக்கெடுப்பை ஒத்திவைப்பதற்கான காரணிகள் தற்போது இல்லையென முன்னதாக தேர்தல் ஆணைக்குழு தலைவர் அறிவித்தார்.

இந்த நிலையில், தபால்மூல வாக்கெடுப்பு, மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்றைய தினம் தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பில், உறுதியளித்தவாறு அரச அச்சகத்தினால் உரிய வாக்குச்சீட்டுகள் வழங்கப்படாமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



















## ஜனாதிபதி ரணில்...

எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குவதற்குமான ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையாக இல்லாதொழிக்க வேண்டியது அவசியமாகும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆர்ப்பாட்டக்காரர்களை பயங்கரவாதிகள் என்றும், பாசிஸவாதிகள் என்றும் அழைத்த தன் மூலம் போராட்ட இயக்ங்களை மிகமோசமானதாகச் சித்தரிக்க முற்பட்டனர்.

அத்தோடு போராட்ட ஒருங்கிணைப்பாளர் உள்ளடங்கலாகப் போராட்டக்காரர்கள் மூவருக்கு எதிராக அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பிரயோகித்தது.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்ச்சியான வன்முறைகளுக்கு உள்ளாவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டமானது கடந்த 1979ஆம் ஆண்டிலிருந்து பெரும் எண்ணிக்கையான தன்னிச்சையான தடுத்துவைப்புக்கள் மற்றும் சித்திரவதைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு வழிகோலியுள்ளது. அச்சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைப்பதாக அரசாங்கம் பலமுறை வாக்குறுதியளித்துள்ள போதிலும், தற்போதுவரை அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

அதுமாத்திரமன்றி ஒருவரைத் தன்னிச்சையாகக் கைதுசெய்வதற்கும், தடுத்துவைப்பதற்குமான ஆயுதமாகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசுக்கு...

எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி கூட்டுப் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவிக்க தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

பல துறைகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நடத்திய கலந்துரையாடலின் பின் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எண்ணெய், மின்சாரம், துறைமுகம், நீர் வழங்கல், சுகாதாரம், கல்வி, வங்கி அமைப்பு உள்ளிட்ட பல துறைகளின் தொழிற்சங்கங்களுடன் இணைந்து இந்த வேலைநிறுத்தத்தினை மேற்கொள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

மேலும் வருமான வரி அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் உரிய பதில்களை வழங்காவிட்டால் மார்ச் முதலாம் திகதி நாட ளாவிய ரீதியில் பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக, அதிக வருமானம் ஈட்டும் அரசாங்க ஊழியர்களை பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற்சங்கங்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் இதனை தெரிவித்துள்ளார்.

கல்வி சக்திவலு துறைமுகம் சுகாதாரம் உட்பட பல் வேறு துறைகளை சேர்ந்த தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிராக அடுத்த வாரம்முதல்பாரிய தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். (ம)

## தூவா...

மாலை 4.30 மணி மற்றும் இரவு 7 மணிக்கு இத்திரைப்படம் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

மேலும் பருத்தித்துறை SS திரையரங்கில் காலை 9 மணிக்கு திரையிடப்படவுள்ளது,

கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு காட்சிப் படுத் தப்படும். (ம)

## முன்...

நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் கணிதத் துறை பேராசிரியராக பணியாற்றியதோடு, யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதியாகவும்பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-33,104)

## தேர்தலுக்கான...

குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, நாட்டில் அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே நிதி ஒதுக்க முடியும் என நிதி அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தியாவசியமற்ற அனைத்து செலவுகளுக்கும் நிதி அமைச்சரின் ஒப்புதல் அவசியம் என மற்றொரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## கொழும்பில்...

உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கினிகத்தேனையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்படுவது பணப்பற்றாக் குறையினால் அல்ல, நாட்டை ஆளும்ஜனாதிபதிக்கோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கோ மக்கள் ஆதரவு இல்லாத காரணத்தினாலேயே ஆகும் என்றார். (ம)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடியாளர்களை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## யாழில் ஜே.வி.பி தலைவர் அநுர

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒத்துழைப்பு வழங்கக்கூடிய நாடு தேவை. இனவாதம் என்பதே இந்த ஆட்சியாளரின் ஒரே வழி என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸ்ஸ நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்துதெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மோசடியாளர்கள் ஒன்றாக பாதுகாக்கப்படுகின்றனர்.

இந்த நாட்டினை அழிவுக்கு கொண்டுவந்தது இந்த மோசடியாளர்களே. ஆகவே இந்த நாட்டுக்கு நல்ல அரசாங்கம் தேவை மோசடிக்காரர்களுக்கு தண்டனை வழங்குகின்ற அரசாங்கம் தேவை. மோசடிசெய்பவர்களுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை வழங்குவோம் என்று பொலிஸ், காணி. அதிகாரத்தினை வழங்குவோம் என்று கூறு கின்றார்.

இந்த ஜனாதிபதி நான்கரை வருடங்கள் பிரதமராக இருந்தார். புதிய அரசியலமைப்பு யாப்பினை தயாரிப்பதற்கு ஒரு சபை தாபிக்கப்பட்டது. அதில் ஒரு குழுவினை அமைத்தனர். இதில் 82 கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அதில் எந்தவொரு அறிக்கையும் புதிய அரசியலமைப்பு யாப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பிக்கவில்லை.

வடக்கில் தேர்தல் வரும்போது 13 ஆவது திருத்தச்சட்டத்தினை வடக்கில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன், தென் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார ஆகிய இருவரும் பந்து அடித்து விளையாடுகின்றனர் என்றார். (ம-104)

## சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு

கடந்த ஜனவரி மாதம் முதல் இது வரையான காலப் பகுதியில் ஒரு இலட்சத்து 57,230 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த முறை சுற்றுலா பயணிகளின் வருகை, அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

இந்த ஆண்டு நாளாந்தம் சுமார் 3,906 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

ரஷ்யா, இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்து அவர்கள் இலங்கை வந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

பெப்ரவரி மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் இலங்கைக்கு 54,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்த எண்ணிக்கை 2022ஆம் ஆண்டு 47,282 ஆக காணப்பட்டது. (ம)


CHOLA FOODS
CHOLA INTERNATIONAL (P) LTD
CIMS
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

**CHOLA FOODS & CIMS COLLEGE**

SCHOLARSHIPS
முற்றிலும் இலவச
Hotel Management
கற்கை நெறிகள்

வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பு



- FOOD & BEVERAGE
- COOKERY
- HOUSE KEEPING
- FRONT OFFICE
- DIPLOMA IN HOTEL MANAGMENT

போன்ற மேலும் பல கற்கைநெறிகள்
(கற்கைநெறி முடிவில் NVQ சான்றிதழ் வழங்கப்படும்)

✓ படிக்கும்போதே 25'000/= சம்பளத்துடனான வேலைவாய்ப்புக்கள்
✓ தங்குமிடம், உணவு வழங்கப்படும்
✓ வசதிகளற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
✓ வயதெல்லை 16 தொடக்கம் 25 வரை
✓ இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
→ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ←
நிர்வாகத்தின் தெரிவே இறுதியானது

0777-068-777 (C-5998)

**O/L - A/L HISTORY**

தனி, குழு வகுப்புக்கள்
மீட்டல் வகுப்புக்கள்
கட்டுரை வினாக்கள்
படம் குறித்தல்,
MCQ, Paper Classes
பு.லக்ஷன் (14634)
**077 482 5438**

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-5997)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

**ஆசிரியர் தேவை**

விஞ்ஞானம் (தரம் 6 - 11 வரை)
கணிதம் (தரம் 6 - 11 வரை)
ஆரம்ப பிரிவு (தரம் 1 - 5 வரை)
(தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அருகில் உள்ள தனியார் கல்வி நிலையம்) (14618)
**077 448 8222**

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம் K.K.S வீதியிலுள்ள கடைக்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு:-
**074 210 4820** (14641)

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் போட்டோ கொப்பி கடைக்கு அனுபவ மிக்க / அனுபவமற்ற ஊழியர்கள் தேவை. யாழ் நகருக்கு அருகில் உள்ளோர் விரும்பத் தக்கது. (14644)
T.P :
**076 832 3682**

**சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்**

V2 TRAVELS CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD உடன் இணைந்து
புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்
பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம் (C-5997)
**V2 TRAVELS 0777-068-777**

யாழிலிருந்து---
Zoom Online Class
**வரலாறு**
**A/L, O/L (தரம் 10,11)**
SB.Sanu (பிரபல பாடசாலை ஆசிரியர்)
பிரிவு -02
ஆரம்பம் : 19.02.2023 (ஞாயிறு 7.30 pm)
நாட்டின் எப்பகுதியில் இருந்தும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புக்கு :- 077 834 3666, 077 214 0675 (Whatsapp) (14618)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4 வணிக வளாகங்கள், ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.
நல்ல தண்ணீர், நல்ல சூழல்.
• விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
• தரகர் [illegible] (14640)
[illegible] 076 [illegible]

**தவறிவிட்டது**

பொன்னம்பலம் பாலசிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையுடன் (491593431V) சிறுதொகைப்பணமும் பர்சுடன் நேற்று முன்தினம் ஆரியகுளம் - நல்லூர் - செம்மணி வீதிப்பகுதியில் விழுந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் நாக விகாரை முன்பாக உள்ள அக்ஷதை ஹோட்டலில் தயவு செய்து ஒப்படைக்கும் படி கேட்டுக்கொள்கின்றேன். பொருத்த மானவிடத்து தாராளமான சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு இலக்கம் :- (14638)
**077 340 3027**

**வேலையாட்கள் தேவை**

முல்லைத்தீவிலுள்ள பண்ணையில் தங்கி வேலை செய்யும் ஆட்கள் தேவை. கால்நடைகள் பராமரிப்பவர், விவசாயம், சமையல் வேலைகள் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.
உணவும் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.
சம்பளம் 36,000 ரூபாயிலிருந்து 45,000 ரூபாய் வரை.
அனுபவத்திற்கு ஏற்றமாதிரியும் ஆற்றலையும் உறுதிப்படுத்துவதன் மூலம் அதிகரித்துக்கொடுக்கப்படும்.
தேசிய அடையாள அட்டை, வங்கிக்கணக்கு உள்ளவர்கள், வயது 18 - 45 வரை உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு
முகாமையாளர் :
**077 429 2500**
தங்கராணி பண்ணை
**021 229 1578 / 076 257 4690** (C-5986)

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)
**A/L தொழில்நுட்ப பிரிவு**
**செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்**
* உயிர்முறைமை தொழில்நுட்பம்
* பொறியியல் தொழில்நுட்பம்
மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் 5வது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு (C-5996)
ஆரம்பம் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00
தொடர்புகளுக்கு : 077 017 5346

**வீடு விற்பனைக்கு**

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து 5 நிமிட நடை தூரத்தில் 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம்
சனி, ஞாயிறு
காலை 10.00 - மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு :
071 416 3280 / 074 271 5339
WhatsApp
**+1 416 893 2377** (14643)

**Biology** Zoom & Direct
**A/L Day Class**
Royal Biology - Kopay
School of Science - Jaffna (14628)
TP : 077 401 2800
By : Sutha Sir
(Chavakachcheri Hindu College)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.